# மெட்ரோ நிலையங்களில் இலவச மருத்துவ முகாம்

சென்னை, ஜன. 3–
மெட்ரோ ரயில் நிலையங்களில், 11 நாட்கள், இலவச மருத்துவ முகாம் நடக்கிறது.



சென்னை விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரல் வரையும்; விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயில்களில் பயணியர் வருகையை அதிகரிக்க, நிர்வாகம் பல்வேறு ஏற்பாடுகளை செய்து வருகின்றன.



இதனையொட்டி, மெட்ரோ நிலையங்களில், இலவச மருத்துவ முகாம், இன்று முதல், 31ம் தேதி வரை நடக்கிறது.

ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் பரிசோதனை, இருதய நோய் தொடர்பான ஆலோசனை, உயரம், எடை அளவு பராமரிப்பு ஆலோசனைகளும் வழங்கப்படும்.

மருத்துவ முகாம், காலை, 8:00 மணி முதல், 11:00 மணி வரை நடக்கும்.

இம்முகாமில் பயணியருடன், பொதுமக்களுக்கும் பங்கேற்கலாம் என, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்து உள்ளது.

**இலவச மருத்துவ முகாம்**

| நாள் | ரயில் நிலையம் |
|---|---|
| இன்று | நேரு பூங்கா |
| நாளை | கீழ்ப்பாக்கம் |
| ஜன., 9 | சென்ட்ரல் |
| 10 | ஷெனாய்நகர் |
| 11 | அண்ணாநகர் கிழக்கு |
| 17 | அண்ணா நகர் டவர் |
| 18 | திருமங்கலம் |
| 23 | கோயம்பேடு |
| 24 | சி.எம்.பி.டி., |
| 25 | அரும்பாக்கம் |
| 31 | வடபழனி |